MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T132R0

நோயாளி தகவல் கையேடு

# டிரையம்சினொலோன் பல் பசை

(TRIAMCINOLONE DENTAL PASTE)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

டிரையம்சினொலோன் (Triamcinolone) என்பது, கார்டிகோஸ்டெராய்டுகள் (corticosteroids) என்ற மருந்துப் பிரிவைச் சேர்ந்த மருந்தாகும். வாய்ப் புண்கள், ஈறு வீக்கம் போன்ற கிருமி-தொற்றாத வாய் அழற்சிகளுக்கு இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் அல்லது பல் மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை அவர்கள் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

மருந்தை இரவில் படுக்கச் செல்வதற்கு முன் பயன்படுத்துவதே சிறந்தது. ஏனெனில், மருந்து இரவு முழுவதும் வேலை செய்யும். மருந்தைப் பகலில் பயன்படுத்தினால், உணவுக்குப் பிறகு பயன்படுத்துங்கள். டியூபிலிருந்து ¼ அங்குல பசையைப் பிதுக்கி ஒரு பருத்தி துடைப்புத் துண்டின் மீது (cotton swab) இடுங்கள். வாயில் எந்த இடத்தில் பயன்படுத்த வேண்டுமோ அங்கு பசையை வைத்து அழுத்தி, அது அவ்விடத்தில் ஒட்டி ஒரு மெல்லிய படலம் உருவாகும்வரை அழுத்துங்கள். மருந்தைத் தேய்க்காதீர்கள். அப்படித் தேய்த்தால், பசை துளாகிவிடலாம் அல்லது மணல்போல் உதிர்ந்துவிடலாம்.

## மருந்து பயன்படுத்த **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை போடத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே போடுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் போடத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருந்து போடுங்கள். முதலில் போடத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ போடாதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வரும் பக்க-விளைவுகள் இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- வாயில் கடுமையான அரிப்பு, எரிச்சல் அல்லது உறுத்தல்.

மருந்து போட்ட இடத்தில் நீர் வடிதல், சீழ் வைத்தல் போன்ற கிருமித்தொற்று அறிகுறிகள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால், மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்

- மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வருதல்.
- இந்த மருந்தை 7 நாட்களுக்குப் பயன்படுத்திய பிறகும் பாதிப்புகள் நீங்கவில்லை.
- வாய் அல்லது தொண்டையில் கிருமித்தொற்று ஏற்பட்டிருக்கிறது.
- உங்களுக்கு வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருத்தல், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்படுதல். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.
- நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வருதல், கர்ப்பமாக இருத்தல், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருத்தல்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமும் நேரடி வெளிச்சமும் படாதவாறு, அறை வெப்பநிலையில் ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.